செ.வெ.எண் : 380. 22.6.07.

**ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை – அறிவிப்புகள், திட்டப் பணிகள் செயலாக்கம், முன்னேற்றம் குறித்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு செய்தார்.**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் சட்டமன்ற அறிவிப்புகள், திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகளுடன் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் துறை செயலர் திரு.அசோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., இயக்குனர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மற்றும் திரு. தங்கவேல், இ.ஆ.ப., திரு.என்.முருகானந்தம், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் என 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சட்டமன்ற அறிவிப்புகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், மத்திய மற்றும் மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கம், மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை, முடிவுற்ற பணிகள், நிலுவையில் உள்ள வேலைகளை துரிதமாக நிறைவேற்ற மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், நிதிப் பயன்பாடு ஆகிய இனங்கள் குறித்து மாண்புமிகு அமைச்சர் ஆய்வு செய்தார்.

அறிவிப்புகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் திருப்திகரமாக உள்ளதாகவும் ஒரிரு இனங்களை தவிர மற்ற அனைத்து அறிவிப்புகளின் மீதும் உரிய அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு அதன்படி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

திட்டப் பணிகளின் நிறைவேற்றத்தில் சிமெண்ட் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்டிருந்த பிரச்சனை தற்போது சரி செய்யப்பட்டள்ளது என்றும், உரிய காலத்தில் நிதி விடுவிக்கப்பட்டு பணிகளின் நிறைவேற்றம் குறித்து மாநில மற்றும் மாவட்ட அளவில் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு ஆய்வுகள் செய்யப்படுவதால் அனைத்து திட்டப் பணிகளிலும் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அரசு செயலர் ஊரக வளர்ச்சி அவர்கள் தெரிவித்தார்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கிராம குளங்கள், குட்டைகள் ஆகியவற்றை சீரமைக்கும் பணிகளுக்கும் சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகளுக்கும் சிறப்பான வரவேற்பு கிடைத்துள்ளதை தனது சுற்றுப் பயணங்களில் மேற்கொள்ளும் ஆய்வின் மூலம் நேரடியாக அறிந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

சிறந்த கிராம ஊராட்சிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு விருது வழங்கிட மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை துரிதப்படுத்திடுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், பணிகள் குறித்த பரிந்துரைகளை சட்டமன்ற உறுப்பினர்களை தொடர்பு கொண்டு விரைவாக பெற்று இத்திட்ட நிதி பயன்படுத்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

சுனாமி நிவாரண திட்டம் மற்றும் மகளிர் மேம்பாட்டு திட்டங்களின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகள்படி, சுனாமி நிவாரண திட்டத்தின் கீழ் மட்டும் இதுவரை 32177 உடல்ஊனமுற்ற நபர்களுக்கு தலா ரூபாய் 10 ஆயிரம் வீதம் 32 கோடியே 17 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும் 27999 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய 72 கோடியே 91 இலட்சம் சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்றும், 88899 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் உடல் ஊனமுற்றோர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள மான்யத்துடன் கூடிய கடனுதவி மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டப் பணிகள் ஆகியவை ஊரகப் பகுதிகளில் சிறந்த வரவேற்பை பெற்றுள்ளன என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

வளர்ச்சிப் பணிகளை உரிய தரத்துடன் அவற்றை உரிய கால அளவிற்குள் நிறைவேற்றுவதில் துறை மேற்கொண்டுள்ள முயற்சிகளையும், இதற்கு மாவட்ட அளவில் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டையும் பாராட்டிய அமைச்சர் அவர்கள் விலையேற்றம், பொதுமக்களின் எதிர்பார்ப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு



இதே போல் தொடர்ந்து செயல்பட்டு அனைத்து பணிகளையும் உரிய கால அளவிற்குள் நிறைவேற்றிடுமாறு தெரிவித்தார்.

வெளியீடு: இயக்குநர், செ.ம.தொ.துறை, சென்னை-9.